Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.90 / 2021**

Depositions of : PW16 (LW9)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: தேன் தமிழ்செல்வன்** | **தொழில்** | : |
| **தந்தை பெயர்** | **: பழனி சாமி** | **முகவரி** | : |
| **வயது** | **: 35** | **மாவட்டம்** | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of April - 2026.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை=**

**நான் தற்போது ஈரோடு ஊழல் தடுப்பு பிரிவில் முதல்நிலை காவலராக பணி புரிகிறேன். அதற்கு முன்பு நாயக் ஆக ஆவடி இரண்டாவது பெட்டாலியனில் வேலை பார்த்த போது 24.11.2019 அன்று சுமார் அதிகாலை 1.15 மணியளவில் லைன் ஆடர்லின் பாலா மற்றும் மணி மூலமாக S.M. நகர் காவலர் குடியிருப்பில் குடியிருக்கும் வெங்கடேஷ் என்பவர் தீ காயங்களுன் இருப்பதாக தகவல் கிடைத்தது. அதற்கு பிறகு டியூட்டி ஆபிசர் நாகலட்சுமி என்பருக்கு தகவல் சொன்னேன். நாங்கள் இருவரும் சம்பவ இடத்திற்கு போன போது அவர் தீ காயங்களுடன் கத்தி கொண்டிருந்தார். அந்த நேரத்தில் ஆம்புலன்ஸ் எதுவும் கிடைக்காததால் அங்கிருந்த ஷேர் ஆட்டோவில் அவரை ஏற்றிகொண்டு நாங்கள்**

இருவரும் ஸ்டெட்போர்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு மருத்துவர்கள் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். அப்போது எங்கள் பெட்டாலியனில் இருந்துஒரு வாகனத்தைஅனுப்பியிருந்தார்கள். அதில் அவரை கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். வண்டியில் போகும் போது அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டோம். அதற்கு அவர் தன்னுடன் இருந்த ஆஷா ராணி என்பவர் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துவிட்டு ஓடிவிட்டதாக சொன்னார். அந்த ஆஷாராணியை பார்த்திருக்கிறேன். ஆஜர் எதிரி தான் அந்த ஆஷாராணி ஆவார். அதன் பிறகு அவரை மருத்துவமனையில் அட்மிட் செய்தோம். இது தொடர்பாக என்னை விசாரணை செய்யதார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.